**சுருக்கம்**

செய்தி மக்கள் தொடர்பத் துறை – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2018–2019ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி எண் 110–ன் கீழ் அறிவித்த அறிவிப்பு – செயலாக்கம் செய்ய தமிழ்நாட்டிலுள்ள பத்திரிகையாளர்களுக்கு பத்திரிகையாளர் நல நிதியத்திலிருந்து வழங்கப்பட்டு வரும் மருத்துவ உதவித் தொகை ரூ.50,000/–ஐ ரூ.1,00,000/–ஆக உயர்த்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நிர்வாகம்–4)த் துறை

அரசாணை (நிலை) எண் 137

நாள் 01.08.2018
திருவள்ளுவர் ஆண்டு 2049
விளம்பி வருடம் ஆடி 16– ம் நாள்
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.17 தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி(நிர்.4)த்துறை, நாள் 14.01.2008.
2. அரசாணை (நிலை) எண்.144, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி(நிர்.4)த்துறை, நாள் 22.04.2008.
3. தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி எண் 110–ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை நாள் 29.06.2018.

-----

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பத்திரிகையாளர் மருத்துவ உதவி பெற தகுதியுள்ள பயனாளிகளை தேர்ந்தெடுக்க துறைச் செயலாளர் தலைமையில் குழு அமைத்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பத்திரிகையாளர்கள் நல நிதியம் மூலம் மருத்துவ உதவி நிதி வழங்குவதற்கு விதிகளை வரையறை செய்து, நோயின் தன்மை மற்றும் சிசிச்சையின் செலவினத்திற்கு ஏற்றவாறு மருத்துவ உதவி நிதி ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)க்கு மிகாமல் வழங்குவது குறித்து பரிந்துரைக் குழு முடிவு செய்யவும் ஆணையிடப்பட்டுள்ளது.

3. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2018–2019 ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி எண் 110–ன் கீழ் பின்வரும் அறிக்கையை அறிவித்துள்ளார்:

> ''பணிக்காலத்தில் பத்திரிகையாளர் கடுமையான நோயினால் பாதிக்கப்பட நேர்ந்தால் அவர்கள் சிகிச்சை மேற்கொள்ள ஏதுவாக பத்திரிகையாளர் நல நிதியம் மூலம் தற்போது வழங்கப்பட்டு வரும் 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி, ஒரு லட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்''

த.பி.பா.,